20.04.2026

O.S.No. 59/2022

PW1– தங்கப்பாண்டி – த/பெ. இசக்கியாப்பிள்ளை

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 20.04.2026

<u>குறுக்கு விசாரணை :</u> ( 1ம் பிரதிவாதி தரப்பில்)

1. நான் மதுரையில் இருந்து வந்துள்ளேன். எனக்கு அதிகாரம் கொடுத்த விலாசம் A–21 ரங்கராம் தெரு, திருநகர், மதுரை. எனக்கு அதிகாரம் கொடுத்த நபரின் பெயர் லெட்சுமி முருகேசன். மேற்படி விலாசம் அவருடையது.

2. எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் வேறு விலாசமும், பத்திரத்தில் வேறு விலாசமும் உள்ளது என்றால் தற்சமயம் சுமார் 3 ஆண்டுகளாக இந்த வழக்கு வாதி 70/6, வி.பி.சிந்தன் நகர், வேடர் புளியங்குளம், திருப்பரங்குன்றம் தாலுகா, மதுரை மாவட்டத்தில் வசித்துவருகிறார்.

3. வழக்கு சொத்து இலஞ்சிகிராமத்தில், தென்காசி தாலுகா, தென்காசி மாவட்டத்தில் உள்ளது. பிராதுதபசில் சொத்தை கிரையம் வாங்கும்சமயத்தில் நான் உடனில்லை. ஆனால் சொத்துபற்றிய விவரங்கள் தற்போது தெரியும்.

4. வாதி கிரைய சொத்தின் சர்வே எண்.979/1பி. அதன் விஸ்தீரணம் 61 செண்ட். அதன் பட்டா எண்.1703. வாதி கிரையம் வாங்கிய கிரையதாரர்களின் பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது, சிட்டாவை

தாக்கல் செய்துள்ளேன். நான் வழக்கிற்காக சிட்டாவை தாக்கல் செய்தேன் என பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

5. பிராதுதபசில்சொத்தை வாதி, ராமையா என்ற சட்டஅலுவலர் மூலம் வாங்கினார். ராமையா மதுரையை சார்ந்தவர். அவர் யார் மூலம் இடத்தை பேசி வாங்கினார் என்று எனக்கு தெரியாது.

6. பிராதுதபசில் சொத்து வாதியின் கிரையதாரர்களுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்பதை நிரூபணம் செய்ய எந்த ஆவணமும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் கிரையதாரர்கள் ஈஸ்வரியம்மாளின் உடன்பிறந்தவர்கள் அல்ல என்றும், வாங்கிய சொத்திற்கும் வாதியின் முன்கிரையதாரருக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

7. மேற்படி சங்கதிகளை நிரூபணம் செய்ய பிராதுடன் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. முன்கிரையதாரர்களின் பட்டாவோ, மூலப்பத்திரமோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

8. பிரதிவாதியின் பாட்டியான ஈஸ்வரியம்மாளும் வாதியின் கிரையதாரர்களும் 40 ஆண்டுகளுக்கு முன்பு வாய்மொழி பாகப்பிரிவினை செய்துகொண்டதாக என் பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

9. பிரதிவாதியின் பாட்டி ஈஸ்வரியம்மாள் 1973 ல் இறந்துவிட்டார் என்றால் எனக்கு அதுப்பற்றி தெரியாது.

10. 1862 ல் ஆங்கிலேயர் ஆட்சிகாலத்தில் ஈஸ்வரியம்மாளின் தகப்பனார் கருப்பன் குடும்பத்தினருக்கு இனாமாக வழங்கப்பட்ட சொத்து என்றால் எனக்கு அதுப்பற்றி தெரியாது. மேற்படி விவரங்கள் எனக்கு எதிருரை மூலம் தெரியவந்ததா என்றால் தெரியவந்தது.

11. பஞ்சத்தின் காரணமாக பிரதிவாதியின் குடும்பத்தினர் 1980 காலகட்டத்தில் வால்பாறை தேயிலை தோட்டத்திற்கு வறுமையின் காரணமாக சென்றுவிட்டார்கள் என்றால் எனக்கு அதுப்பற்றி தெரியாது. அவர்கள் ஊரில் இல்லாத சந்தர்ப்பத்தை பயன்படுத்தி வாதி கிரையம் வாங்கிவிட்டார் என்றால் சரியல்ல.

12. பஞ்சமி நிலத்தை வாங்குவது சட்டபுறம்பானது என்றால் எனக்கு அதுப்பற்றி தெரியாது, அது பஞ்சமி நிலம் இல்லை. வாதியை தவிர வேறு யாருக்கும் பிராதுதபசில்சொத்தில் உரிமை இல்லை என்றாலும், பிரதிவாதிகள் அன்னியர்கள் என்று சொன்னாலும் சரிதான்.

13. பிரதிவாதியின் பாட்டி 979/ஏ1ல் 30 செண்ட், பி1 ல் 61 செண்ட் ஆங்கிலேயர் காலத்தில் வழங்கப்பட்து என்றால் எனக்கு அதுப்பற்றி தெரியாது. மேற்படி நிலத்திற்கான பட்டா நாளதுதேதிவரை பிரதிவாதியின் பாட்டியின் பெயரில் பட்டா எண்.141 ஆக இருந்துவருகிறது என்றால் எனக்கு அதுப்பற்றி தெரியாது.

14. பிரதிவாதிகள் 2000 ல் ஊர்திரும்பிய பிறகு மேற்படி விற்பனை பற்றி தெரிந்தவுடன் பட்டாவில் பெயர் மாற்றம் செய்ய திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் மூலமும், தென்காசி மாவட்ட ஆட்சியர் மூலமும் முயற்சி செய்துவந்தார்கள் என்றால் எனக்கு அதுப்பற்றி தெரியாது.

15. பிரதிவாதிகள் வருவாய் துறை மூலம் பல முயற்சி செய்தும் பலனளிக்காததால் வாதியை பலமுறை மதுரையில்சென்று சந்தித்து வந்தார்கள் என்றால் வாதியை பார்த்தார்கள், வாதி வருவாய் கோட்டாட்சியரிடம் கேட்டு பதில் கூறுவதாக கூறினார். வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வாதிகு தான் கிரையம் வாங்கிய சொத்து பஞ்சமி நிலம் என்று தெரியும் என்றால் சரியல்ல. நான் வருவாய் கோட்டாட்சியரிடம் வாக்குமூலம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். நான், வாக்குமூலத்தில் வாதி, மறுபயனுக்காகதான் பிராதுதபசில்சொத்தை கிரையம் வாங்கியுள்ளதாக கூறியுள்ளோம். அதற்கு தகுந்த பணம் கொடுத்தால் கிரையத்தை ரத்து செய்வோம் என கூறியுள்ளோம் என்றால் நான் அவ்வாறு சொன்னதாக எனக்கு ஞாபகம் இல்லை.

16. வாதியின் முன்கிரையதாரர்களான சிவனியம்மாளின் வாரிசுகளை யாரையும் கட்சி சேர்க்கவில்லை என்றால் 2ம் பிரதிவாதி கோட்டாட்சியரிடம் மனு கொடுத்ததால் அவரை மட்டும் கட்சி சேர்த்துள்ளோம். 2ம் பிரதிவாதிக்கு எந்த உரிமையும் கிடையாது என்றாலும், அவரது மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றாலும் சரிதான்.

17. கோட்டாட்சியர் ஆவணங்களை சரியாக பரிசீலனை செய்யாமல் ஒருதலைபட்சமாக தங்கள் அலுவலக ஆவணங்களில் எந்தஆவணமும் துலங்கவில்லை என்றும், மேல்முறையீட்டை நாடுங்கள் என உத்தரவு பிறப்பித்தார் என்றால் சரியல்ல.

18. தற்போது 1ம் பிரதிவாதி, மாவட்ட வருவாய் அதிகாரியிடம் மேல்முறையீடு செய்தார் என்றால் எனக்கு அதுப்பற்றி தெரியாது. மேல்முறையீடு செய்தவிவரம் தெரிந்தும், தெரியாது என பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

19. தற்போது பிரதிவாதிதான் பிராதுதபசில் சொத்தை அனுபவித்துவருகிறார்கள் என்றால் சரியல்ல. இடைக்காலமனுவில் கிடைத்த உத்தரவின் அடிப்படையில்தான் வாதி அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

20. இந்த வழக்கில் நீதிமன்றத்தை ஏமாற்றிதான் இடைக்காலமனுவில் உத்தரவு பெற்றோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நீதிமன்ற முத்திரையை சரியாக செலுத்தவில்லை என்றால் சரியல்ல.

21. 1ம் பிரதிவாதி சட்டத்தை மதிக்கமாட்டார் என்றும், ஆள்பலமும், பணபலமும் கொண்டவர் என எவ்வாறு தெரியும் என்றால் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து அவர் கட்டுப்படவில்லை என்பதால் நாங்கள் அவ்வாறு கூறியுள்ளோம். காவல்நிலையத்தில் பிரதிவாதிகள் கொடுத்த புகாரில் வாதியிடம், பிராதுதபசில் சொத்து பஞ்சமி நிலம்

என்பதால் எந்தமாறுதலும் செய்யக்கூடாது என அறிவுறுத்தினார்கள் என்றால் சரியல்ல, நீதிமன்ற மூலம் தீர்த்துக்கொள்ளுமாறு கூறிவிட்டார்கள்.

22. வாதி பணபலமிக்கவர் என்றும், பிரதிவாதிகள் ஏழை என்றும் சொன்னால் சரியல்ல.

23. வாதியின் கிரையதாரர்கள் ஈஸ்வரியம்மாளின் சகோதரிகள் என்று நிரூபணம் செய்ய எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் மோசடி ஆவணம் என்றால் சரியல்ல.

24. ஈஸ்வரியம்மாளுடன் உடன்பிறந்தவர்கள் யாரும் இல்லை என்றும், அவரது தந்தைக்கு அவர்தான் ஒரே வாரிசு என்றாலும் சரியல்ல. சொத்தை தவிர ஈஸ்வரியம்மாளுக்கு வேறு சொத்துக்களை பொறுத்து ஈஸ்வரிம்மாளின் சகோதரிகள் என்று கூறி கொள்ளும் நபர்கள் எந்த உரிமையும் கோரவில்லை என்றால் எனக்கு அதுப்பற்றி தெரியாது.

25. வாதி கிரையம் வாங்கிய 1990 பத்திரம் மோசடியானது என்றால் சரியல்ல. இந்நாள்வரை வில்லங்சான்றிதழில் எந்த வில்லங்கபரிவர்த்தனையும் துலங்காது என்றால் சரியல்ல.

26. வா.சா.ஆ.1 ஆவணம் மோசடி ஆவணம் என்பதால் அந்த ஆவணத்தை அடிப்படையாக கொண்ட இந்த வழக்கு செல்லாவழக்கு என்றால் சரியல்ல.

27. வழக்கில் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களும் மோசடியானது என்றால் சரியல்ல. வழக்கானது செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. வழக்குச்சொத்து பஞ்சமி நிலம் என்பதாலும், வாதி மாற்றுச்சாதியினர் என்பதால் அந்த கிரையம் செல்லாது என்றாலும் சரியல்ல.

28. பிரதிவாதிகள் ஏழை என்றாலும், அவர்கள் எந்த திருட்டும் செய்யவில்லை என்றாலும், பிராதில் அவர்களை பற்றி அவதூறாக பேசியுள்ளேன் என்றாலும் சரியல்ல.

**ஒப்பம்/- K.N. குரு**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**செங்கோட்டை**